1975 அக்டோபர் 27]

* 70 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) மேட்டுப் பாளையம் அரசு மருத்துவ மனையில் முன்னாள் இராணுவத் தினருக்காக 12 படுக்கைகள் கொண்ட ஒரு தனிப்பகுதி (இராணுவத்தினர் நிவாரண நிதியிலிருந்தும் அரசு நிதி யிலிருந்தும்) கட்ட 1975-76 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணியாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் மூலம் பிரசவ அறை ஒன்று நன்கொடை யாகக் கட்டி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

* 71 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to put up additional building for the hospital at Denkanikotta in Dharmapuri district, and also to provide a maternity ward; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இதுபற்றி நலத்துறை இயக்குநருடைய பரிசீலனையில் ஒரு ஆலோசனை ஏற்கெனவே இருந்து வருகிறது.

கதிர்வீச்சு மருத்துவப் பயிற்சி

* 72 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73, 1973–74 ஆம் ஆண்டுகளில் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலும், மதுரை அரசினர் பொது மருத்துவ மனையிலும் எக்ஸ்ரே டிபார்ட்மெண்டில் (Certified Radiological Assistant) பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு, ஆண்டுவாரியாக?